# கணவன் மனைவியிடையே அன்பை அல்லது பிரிவை உண்டாக்க செய்யப்படும் சூனியச் செயல்கள்

## ( அஸ்–ஸர்ஃப் – வல்–அத்ஃப் )

அறிஞர்களின் ஃபத்வாக்களின் தொகுப்பு



Islam Tamil
இஸ்லாம் தமிழ்
islamtamil.com

# கணவன் மனைவியிடையே அன்பை அல்லது பிரிவை உண்டாக்க செய்யப்படும் சூனியச் செயல்கள் (அஸ்-ஸர்ஃப் – வல்-அத்ஃப்)

அறிஞர்களின் ஃபத்வாக்களின் தொகுப்பு

## கேள்வி

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு. கணவன்-மனைவிக்கிடையே பிரிவை அல்லது அன்பை ஏற்படுத்தச் செய்யப்படும் சூனியச் செயல்கள் அல்லது செய்வினைகள் செய்வது போன்ற சட்டம் என்ன? மேலும், சூனியத்திற்குச் சிகிச்சை அளிப்பதாகக் கூறுபவர்களிடமும், முஸ்லிம் அல்லாதவரிடமும் செல்வதன் சட்டம் என்ன?

## பதில்

**வஅலைக்குமுஸ்ஸலாம் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு.**

**சுருக்கம்:** கணவன் மனைவிக்கு இடையே அன்பை உண்டாக்க அல்லது பிரிவை உண்டாக்கப் பயன்படுத்தப்படும் இத்தகைய செயல்முறைகள் உண்மையில் நடைமுறையில் இருக்கின்றன (அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பானாக). அவை சூனியத்தைச் சேர்ந்தவை. அறிஞர்கள் இதை "ஸர்ஃப் – அத்ஃப்" என்றும் "திவலா" என்றும் கூறுகின்றனர். இதற்கான சிறந்த சிகிச்சை, ஒருவர் குர்ஆனையும் உறுதியான துஆக்களையும் கொண்டு தனக்குத்தானே ஓதிக்கொள்வதாகும். பிறரிடம் ஓதிப்பார்க்கச் சொல்லிக் கேட்காதவர்கள், கேள்வி கணக்கின்றி சொர்க்கம் செல்லும் எழுபதாயிரம் பேரில் உள்ளவர்கள் என்று நபி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள். பிறரிடம் கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டால், சரியான அகீதா (கொள்கை) உள்ள, குர்ஆனையும்



مسجد أهل السنة والجماعة
Masjid Ahlus Sunnah wal Jama'ah
Coimbatore
@islamtamilinfo
islamtamil.com
Islam Tamil
இஸ்லாம் தமிழ்

ஸுன்னாவையும் கொண்டு மட்டுமே ஓதும், நம்பகமான ஒருவரிடம் கேட்கலாம். ஆனால், மந்திரம், தாயத்து, மாந்திரீகம் செய்பவர்களிடமோ, தங்கள் சிகிச்சை முறையை மறைப்பவர்களிடமோ செல்வது கூடாது; அவர்கள் தங்களை முஸ்லிம் என்று கூறிக்கொண்டாலும் சரியே. சூனியத்திற்குச் “சிகிச்சை” அளிப்பதாகக் கூறும் முஸ்லிம் அல்லாதவரிடம் செல்வது இதைவிடக் கடுமையானது.

◆ **முதலாவது: இத்தகைய செயல்முறைகள் நடைமுறையில் இருக்கின்றனவா? அவற்றின் சட்டம் என்ன?**

ஆம், இருக்கின்றன. சூனியத்தின் மூலம் கணவன் மனைவியைப் பிரிப்பது பற்றி அல்லாஹ் கூறுகிறான்:

﴿فَيَتَعَلَّمُونَ مِنْهُمَا مَا يُفَرِّقُونَ بِهِ بَيْنَ الْمَرْءِ وَزَوْجِهِ وَمَا هُمْ بِضَارِّينَ بِهِ مِنْ أَحَدٍ إِلَّا بِإِذْنِ اللَّهِ﴾

“அவர்கள் ஆணுக்கும் அவன் மனைவிக்கும் இடையில் எதன் மூலம் பிரிவினை உண்டாக்குவார்களோ அதை அவ்விரு(வான)வரிடமிருந்து கற்றார்கள். ஆனால் அல்லாஹ்வின் அனுமதியின்றி அதைக் கொண்டு அவர்கள் யாருக்கும் தீங்கிழைக்க முடியாது.”

(அல்-பகரா: 102)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

«إن الرقى والتمائم والتولة شرك»



مسجد أهل السنة والجماعة
Masjid Ahlus Sunnah wal Jama'ah
Coimbatore
@islamtamilinfo
islamtamil.com
Islam Tamil
இஸ்லாம் தமிழ்

“நிச்சயமாக (மார்க்கத்திற்கு முரணான) ஓதிப்பார்த்தல்கள், தாயத்துகள், திவலா (கணவனின் அன்பைப் பெறுவதற்காகச் செய்யப்படும் ஒரு வகை மாந்திரீகம்) ஆகியவை இணைவைப்பாகும்.”
(அபூதாவூத் 3883, இப்னு மாஜா 3530)

“திவலா” என்பதற்கு இப்னு மஸ்ஊத் ரதியல்லாஹு அன்ஹு அவர்கள் இவ்வாறு விளக்கம் அளித்தார்கள்:

«شيء تصنعه النساء يتحببن إلى أزواجهن»

“கணவர்களின் அன்பைப் பெறுவதற்காகப் பெண்கள் செய்யும் ஒரு வகை செயல் (மாந்திரீகம்).”
(ஸஹீஹ் இப்னு ஹிப்பான் 6090; அல்பானீ இதை ஸஹீஹா 331-இல் ஸஹீஹ் என்று கூறியுள்ளார்)

**ஷைக் இப்னு உஸைமீன் ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார்கள்:**

““மார்க்கத்தில் சூனியம் இரண்டு வகைப்படும்: முதலாவது: முடிச்சுகளும் மந்திரங்களும்; அதாவது, சூனியம் செய்யப்பட்டவருக்குத் தான் நாடும் தீங்கை ஏற்படுத்துவதற்காக, ஷைத்தான்களைப் பயன்படுத்த சூனியக்காரன் ஓதும் மந்திரங்களும், (பொருள் புரியாத) குறியீடுகளுமாகும். ஆனால் அல்லாஹ் கூறுகிறான்:

“அல்லாஹ்வின் அனுமதியின்றி அதைக் கொண்டு அவர்கள் யாருக்கும் தீங்கிழைக்க முடியாது.” (அல்-பகரா: 102).

இரண்டாவது: சூனியம் செய்யப்பட்டவரின் உடல், அறிவு, விருப்பம், நாட்டம் ஆகியவற்றில் தாக்கம் ஏற்படுத்தும்

மருந்துகளும் மூலிகைகளும். இதனால் அவர் (ஒருவரை விட்டு) (வெறுத்து) விலகுவதையும் (இன்னொருவர் பக்கம்) (விரும்பி) சாய்வதையும் காண்பீர்கள். இதைத்தான் அவர்கள் “ஸர்ஃப்” (விலகுதல்) என்றும் “அத்ஃப்” (சாய்தல்) என்றும் கூறுகின்றனர். இதன் மூலம் ஒருவரைத் தன் மனைவியின் மீதோ வேறொரு பெண்ணின் மீதோ சாயும்படி செய்கின்றனர். அவள் விரும்பியபடி இழுத்துச் செல்லும் ஒரு கால்நடையைப் போல அவர் ஆகிவிடுகிறார். “ஸர்ஃப்” என்பது இதற்கு நேர் எதிரானது (பிடிக்காமல் வெறுத்து இருப்பது)”

ஆகவே சூனியம் இரண்டு வகை: (அ) இணைவைப்பு: இது ஷைத்தான்களின் மூலம் செய்யப்படும் முதல் வகையாகும். சூனியக்காரன் அவற்றை வணங்கி, அவற்றிடம் நெருக்கம் தேடி, சூனியம் செய்யப்பட்டவர் மீது அவற்றை ஏவிவிடுகிறான். (ஆ) அத்துமீறலும் பாவமும்: இது மருந்துகள், மூலிகைகள் போன்றவற்றின் மூலம் செய்யப்படும் இரண்டாம் வகையாகும்.” (மஜ்மூஉ ஃபதாவா வரஸாஇல் இப்னு உஸைமீன், பாகம் 9, பக்கம் 489)

**ஷைக் இப்னு பாஸ் ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார்கள்:**

“அத்-திவலா என்பது: இது சூனியத்தின் ஒரு வகையாகும், இது அஸ்-ஸர்ஃப் மற்றும் அல்-அத்ஃப் என்றும் அழைக்கப்படும், இது தடைசெய்யப்பட்டதாகும். தாயத்துகளும் அவ்வாறே தடைசெய்யப்பட்டவையாகும், அவை பாதுகாப்பிற்காக கட்டப்படுபவை, அவை ‘ஜவாமிஃ’ என்றும் ‘ஹுரூஸ்’ என்றும் அழைக்கப்படுகின்றன; ஏனெனில், நபி ﷺ அவற்றைக் கடுமையாகத் தடுத்துள்ளார்கள், அவற்றில் எதையும் அவர்கள் விதிவிலக்காக்கவில்லை, மேலும் அதனை இணைவைப்பு என்று பெயரிட்டுள்ளார்கள், அதைத் தொங்கவிடுபவருக்கு எதிராகப்


مسجد أهل السنة والجماعة
Masjid Ahlus Sunnah wal Jama'ah
Coimbatore
@islamtamilinfo
islamtamil.com
Islam Tamil
இஸ்லாம் தமிழ்

பிரார்த்தித்துள்ளார்கள்.”
(மஜ்மூஉ ஃபதாவா இப்னு பாஸ், பாகம் 4, பக்கம் 332)

### ◆ இரண்டாவது: தன் சிகிச்சை முறையையும், தான் ஓதுவதையும், தரும் மருந்துகளையும் மறைப்பவரிடம் செல்வதன் சட்டம்

அவ்வாறானவர்களிடம் செல்வது கூடவே கூடாது. மார்க்கம் அனுமதித்த ருக்யாவுக்கு (ஓதிப்பார்த்தலுக்கு), அதன் பொருள் தெரிந்ததாக இருக்க வேண்டும் என்பது நிபந்தனை.

**ஹாஃபித் இப்னு ஹஜர் ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார்கள்:**

“மூன்று நிபந்தனைகள் ஒன்று சேரும்போது ருக்யா ஆகுமானது என்பதில் அறிஞர்கள் ஒருமித்துள்ளனர்:
(1) அது அல்லாஹ்வின் வார்த்தையாலோ, அவனுடைய பெயர்கள் மற்றும் பண்புகளாலோ இருக்க வேண்டும்.

(2) அரபு மொழியிலோ, அல்லது பொருள் புரியும் வேறு மொழியிலோ இருக்க வேண்டும்.

(3) ருக்யா தானாகப் பலனளிப்பதில்லை; மாறாக அல்லாஹ்வின் மூலமே பலனளிக்கிறது என்று நம்ப வேண்டும்.”
(ஃபத்ஹுல் பாரீ, பாகம் 10, பக்கம் 195)



مسجد أهل السنة والجماعة
Masjid Ahlus Sunnah wal Jama'ah
Coimbatore
@islamtamilinfo
islamtamil.com
Islam Tamil
இஸ்லாம் தமிழ்

**ஷைக் இப்னு பாஸ் ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார்கள்:**

“(ஹதீஸில் தடுக்கப்பட்ட) ஓதிப்பார்த்தல்கள் என்பதன் கருத்து: பொருள் தெரியாத ஓதிப்பார்த்தல்கள், அல்லது இணைவைப்பு கலந்த ஓதிப்பார்த்தல்கள். ஓதுதலில் ஆகுமானது மார்க்க ரீதியான ருக்யா மட்டுமே. ஏனெனில் நபி ﷺ அவர்கள், “இணைவைப்பு இல்லாத வரை ஓதிப்பார்ப்பதில் தவறில்லை” என்று கூறினார்கள். மேலும் அவர்கள் (பிறருக்கு) ஓதிப்பார்த்தார்கள்; (பிறரால்) ஓதிப்பார்க்கவும் பட்டார்கள்.”

(மஜ்மூஉ ஃபதாவா இப்னு பாஸ், பாகம் 4, பக்கம் 332)

**நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:**

«اعرضوا عليّ رقاكم، لا بأس بالرقى ما لم يكن فيه شرك»

“உங்கள் ஓதிப்பார்த்தல்களை என்னிடம் எடுத்துக் காட்டுங்கள். இணைவைப்பு இல்லாத வரை ஓதிப்பார்ப்பதில் தவறில்லை.”

(ஸஹீஹ் முஸ்லிம் 2200)

நபி ﷺ அவர்கள் ஓதிப்பார்த்தல்களைத் தம்மிடம் காட்டும்படி கேட்டார்கள். ஆகவே, என்ன ஓதப்படுகிறது என்று தெரியாத ருக்யா ஏற்கப்படாது என்பது இதிலிருந்து தெரிகிறது.

சூனியத்திற்குச் சிகிச்சை அளிப்பதாகக் கூறும் இத்தகையவர்களைப் பற்றிக் கூறப்படும் செயல்கள்: ஒருவரின் கையில் ஏதோ ஒன்றை வைத்துவிட்டு, அவருக்குப் பாதிப்பு உண்டா இல்லையா என்று தனக்குத் தெரியும் எனக் கூறுவது இது மறைவான விஷயத்தை அறிவதாக வாதிடுவதாகும்; தான் என்ன ஓதுகிறார் என்பதை மறைப்பது; சூனியத்தை, செய்வினையைச் சரி செய்கிறேன் என்று கூறி, உள்ளே என்ன இருக்கிறது என்று சொல்லாமல் மாத்திரைகளைக்



مسجد أهل السنة والجماعة
Masjid Ahlus Sunnah wal Jama'ah
Coimbatore
@islamtamilinfo
islamtamil.com
Islam Tamil
இஸ்லாம் தமிழ்

கொடுப்பது. இவை அனைத்தும் குறிகாரர்கள், சூனியக்காரர்களின் செயல்களாகும்.

**ஷைக் இப்னு பாஸ் ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார்கள்:**

“குறிகாரர்கள், சூனியக்காரர்கள், மோசடிக்காரர்கள் ஆகியோரிடமோ, அவர்கள் அல்லாத வேறு எவரிடமும் செல்வது கூடாது. மாறாக, அவர்களைப் பற்றி (மக்களுக்கு) எச்சரிக்க வேண்டும்; அவர்களைத் தடுத்து நிறுத்த வேண்டும். ஏனெனில் நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: “யார் குறிசொல்பவனிடம் சென்று ஏதேனும் ஒன்றைப் பற்றிக் கேட்கிறாரோ, அவருடைய நாற்பது இரவுகளின் தொழுகை ஏற்கப்படாது” (முஸ்லிம்). மேலும் நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: “யார் குறிகாரனிடமோ குறிசொல்பவனிடமோ சென்று, அவன் சொல்வதை உண்மையென நம்புகிறாரோ, அவர் முஹம்மத் ﷺ அவர்கள் மீது இறக்கப்பட்டதை நிராகரித்துவிட்டார்.” குறிகாரர்களைப் பற்றி நபி ﷺ அவர்களிடம் கேட்கப்பட்டபோது, “அவர்களிடம் செல்லாதீர்கள்” என்று கூறினார்கள். குறிகாரர்கள் மறைவானவற்றை அறிவதாக வாதிடுகின்றனர்; அதற்குத் தங்கள் ஷைத்தான்களையே சார்ந்திருக்கின்றனர். எனவே குறிகாரர்களிடமும் குறிசொல்பவர்களிடமும் செல்வதோ, அவர்களிடம் எதைப் பற்றியும் கேட்பதோ கூடாது. மாறாக அவர்கள் தடுக்கப்பட வேண்டும், அவர்கள் அதைச் செய்யாமல் இருப்பதற்காக தண்டிக்கப்பட வேண்டும். ஆனால், மார்க்க ரீதியான ருக்யாவுக்குப் பெயர் பெற்ற நல்லவர்களிடம் சென்று, அவர்கள் அவருக்கு ஓதிப்பார்க்கலாம்.”

(மஜ்மூஉ ஃபதாவா இப்னு பாஸ், பாகம் 8, பக்கம் 158)

**ஹதீஸ் ஆதாரங்கள்:** முஸ்லிம் 2230, அபூதாவூத் 3904, முஸ்லிம் 537.

**குறிப்பு:** மேலே ஷைக் இப்னு உஸைமீன் ரஹிமஹுல்லாஹ் அவர்கள், சூனியக்காரன் ஷைத்தான்களைப் பயன்படுத்துகிறான்


مسجد أهل السنة والجماعة
Masjid Ahlus Sunnah wal Jama'ah
Coimbatore
@islamtamilinfo
islamtamil.com
Islam Tamil
இஸ்லாம் தமிழ்

என்று கூறினார்கள். இங்கே ஷைக் இப்னு பாஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள், குறிகாரர்கள் மறைவானவற்றை அறிவதாக வாதிடுகின்றனர் என்றும், அதற்குத் தங்கள் ஷைத்தான்களைச் சார்ந்திருக்கின்றனர் என்றும் கூறுகிறார்கள். இவ்விரண்டும் முரண்பட்டவை அல்ல. சூனியக்காரன், ஷைத்தான்களை வணங்கி, அவற்றின் மூலம் பிறருக்குத் தீங்கிழைக்கிறான். குறிகாரன், ஷைத்தான்களின் மூலம் செய்திகளைப் பெற்று, மறைவானவற்றை அறிவதாக வாதிடுகிறான். அவன் வாதிடுவது "மறைவானதை அறிவதாக"த்தான்; மறைவானதை அல்லாஹ்வைத் தவிர யாரும் அறியமாட்டார்கள். இருவருமே ஷைத்தான்களைச் சார்ந்திருக்கிறார்கள்; பல நேரங்களில் ஒரே நபர் இரண்டையும் செய்கிறான். அவர்கள் இதை எப்படிச் செய்கிறார்கள் என்ற விவரங்களைத் தேடுவது ஒரு முஸ்லிமின் வேலை அல்ல; குர்ஆனும் ஸுன்னாவும் கூறிய அளவே நமக்குப் போதுமானது.

ஷைக் அவர்கள் குறிப்பிட்ட "நல்லவர்கள்" என்பவர்கள், சரியான அகீதா (தவ்ஹீதும் ஸுன்னாவும்) உள்ளவர்கள்; கப்ருகளிடம் உதவி தேடுதல், தாயத்து கட்டுதல், சூனியம் போன்ற எல்லா வகை இணைவைப்பிலிருந்தும் விலகியவர்கள். முன்னர் கூறிய இப்னு ஹஜர் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் மூன்று நிபந்தனைகளின்படி, அல்லாஹ்வின் வார்த்தையாலும், அவனுடைய பெயர்கள் மற்றும் பண்புகளாலும், பொருள் தெரிந்த வார்த்தைகளாலும் மட்டுமே அவர்கள் ஓதிப்பார்க்க வேண்டும். இணைவைப்பில் ஈடுபடுபவரிடம் — அவர் தம்மை முஸ்லிம் என்று கூறிக்கொண்டாலும் — ருக்யா செய்துகொள்ளச் செல்லக் கூடாது.

இப்னு ஹஜர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் குறிப்பிட்ட மூன்றாவது நிபந்தனை, அதாவது "ருக்யா தானாகப் பலனளிப்பதில்லை; அல்லாஹ்வின் மூலமே பலனளிக்கிறது" என்று நம்புவது, உள்ளத்தோடு தொடர்புடையது. ஓதுபவரின் உள்ளத்தில் அந்த நம்பிக்கை இருக்கிறதா என்று நாம் எப்படி அறிவது? உள்ளங்களை



مسجد أهل السنة والجماعة
Masjid Ahlus Sunnah wal Jama'ah
Coimbatore
@islamtamilinfo
islamtamil.com
Islam Tamil
இஸ்லாம் தமிழ்

ஆராய நாம் கட்டளையிடப்படவில்லை. நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

«إِنِّي لَمْ أُومَرْ أَنْ أَنْقُبَ عَنْ قُلُوبِ النَّاسِ وَلَا أَشُقَّ بُطُونَهُمْ»

“மக்களின் உள்ளங்களைத் துருவிப் பார்க்கவோ, அவர்களின் வயிறுகளைப் பிளந்து பார்க்கவோ நான் கட்டளையிடப்படவில்லை.”

(புகாரீ 4351, முஸ்லிம் 1064)

ஆகவே, நாம் வெளிப்படையானதைக் கொண்டே தீர்மானிப்போம். “என் கையில் தனிச் சக்தி இருக்கிறது” என்பது போலக் குணத்தைத் தன்னோடு இணைத்துப் பேசுவதும், குணமாவதற்கு உத்தரவாதம் தருவதும், “ருக்யா அல்லாஹ்வின் மூலமே பலனளிக்கிறது” என்ற நம்பிக்கை அவரிடம் இல்லை என்பதற்கான வெளிப்படையான அடையாளங்களாகும். மறைவானதை அறிவதாக வாதிடுவதும், தான் ஓதுவதையும் தன் கையிலிருந்து தரும் பொருள்களையும் மறைப்பதும், அவர் குறிகாரர்களின் வழியில் இருக்கிறார் என்பதற்கான அடையாளங்களாகும்; அத்தகையவர்களிடம் செல்லக் கூடாது என்பதை முன்பே கண்டோம். ஒருவர் தம்மை “ஸலஃபி” என்றோ “அஹ்லுஸ் ஸுன்னா” என்றோ கூறிக்கொள்வது மட்டும் அளவுகோல் அல்ல; அவருடைய செயல்தான் அளவுகோல். வெளிப்படையாக எந்தக் குறையும் தெரியாமல், ஆனாலும் மனதில் சந்தேகம் இருந்தால், நபி ﷺ அவர்களின் இந்த வழிகாட்டலைப் பின்பற்ற வேண்டும்:

«دَعْ مَا يَرِيبُكَ إِلَى مَا لَا يَرِيبُكَ، فَإِنَّ الصِّدْقَ طُمَأْنِينَةٌ، وَإِنَّ الْكَذِبَ رِيبَةٌ»



مسجد أهل السنة والجماعة
Masjid Ahlus Sunnah wal Jama'ah
Coimbatore
@islamtamilinfo
islamtamil.com
Islam Tamil
இஸ்லாம் தமிழ்

“உனக்குச் சந்தேகம் தருவதை விட்டுவிட்டு, சந்தேகம் தராததன் பக்கம் செல். ஏனெனில் உண்மை மன அமைதி தரும்; பொய் சந்தேகம் தரும்.”

(திர்மிதீ 2518)

<u>இவை அனைத்தையும் விடப் பாதுகாப்பானதும் சிறந்ததும், ஒருவர் தனக்குத்தானே ஓதிக்கொள்வதாகும்.</u> இங்கே ஒரு சந்தேகம் எழலாம்: மேலே ஷைக் இப்னு பாஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள், “நபி ﷺ அவர்கள் (பிறரால்) ஓதிப்பார்க்கவும் பட்டார்கள்” என்று கூறினார்கள். அதே நேரத்தில் நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

«يَدْخُلُ الْجَنَّةَ مِنْ أُمَّتِي سَبْعُونَ أَلْفًا بِغَيْرِ حِسَابٍ، هُمُ الَّذِينَ لَا يَسْتَرْقُونَ، وَلَا يَتَطَيَّرُونَ، وَعَلَى رَبِّهِمْ يَتَوَكَّلُونَ»

“என் சமுதாயத்தில் எழுபதாயிரம் பேர் கேள்வி கணக்கின்றிச் சொர்க்கம் செல்வார்கள். அவர்கள், (தங்களுக்கு) ஓதிப்பார்க்குமாறு (பிறரிடம்) கேட்காதவர்கள்; சகுனம் பார்க்காதவர்கள்; தங்கள் இறைவன் மீதே தவக்குல் வைப்பவர்கள்.”

(புகாரீ 6472)

இவ்விரண்டுக்கும் இடையே முரண் இல்லை. ஹதீஸில் வந்துள்ள சொல் «لا يسترقون» (லா யஸ்தர்கூன்). இதன் பொருள், “அவர்களுக்கு யாரும் ஓதிப்பார்க்கக் கூடாது” என்பதல்ல; “தங்களுக்கு ஓதிப்பார்க்குமாறு அவர்கள் பிறரிடம் கேட்க மாட்டார்கள்” என்பதே. ஆகவே, அவர்கள் கேட்காமலேயே பிறர் தாமாக முன்வந்து


مسجد أهل السنة والجماعة
Masjid Ahlus Sunnah wal Jama'ah
Coimbatore
@islamtamilinfo
islamtamil.com
Islam Tamil
இஸ்லாம் தமிழ்

அவர்களுக்கு ஓதிப்பார்ப்பது இதில் அடங்காது. ஷைக் இப்னு உஸைமீன் ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார்கள்:

"'லா யஸ்தர்கூன்' என்பதன் பொருள்: தங்கள் மீது ஓதுமாறு எவரிடமும் கேட்க மாட்டார்கள். ஆகவே, (நோயாளி) நீ தனக்கு ஓத வேண்டுமென்று ஆசைப்படுவதைக் கண்டால், அவரை (ஓதுமாறு) கேட்கும் சங்கடத்தில் ஆழ்த்தாமல் இருக்க, நீயே அவர் மீது ஓதிவிடு."
(ஷர்ஹு ரியாதிஸ் ஸாலிஹீன், இப்னு உஸைமீன், பாகம் 1, பக்கம் 50)

நபி ﷺ அவர்கள் யாரிடமும் "எனக்கு ஓதுங்கள்" என்று கேட்டதில்லை. ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தாமாகவே வந்து நபி ﷺ அவர்களுக்கு ஓதினார்கள் (முஸ்லிம் 2186). நபி ﷺ அவர்கள் நோயுற்றால் தமக்குத்தாமே ஓதிக்கொள்வார்கள்; அவர்களுடைய வலி கடுமையானபோது ஆயிஷா ரதியல்லாஹு அன்ஹா அவர்கள் தாமாக முன்வந்து ஓதினார்கள். ஆயிஷா ரதியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கிறார்கள்:

«أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ كَانَ إِذَا اشْتَكَى يَقْرَأُ عَلَى نَفْسِهِ بِالْمُعَوِّذَاتِ وَيَنْفُثُ، فَلَمَّا اشْتَدَّ وَجَعُهُ كُنْتُ أَقْرَأُ عَلَيْهِ، وَأَمْسَحُ بِيَدِهِ رَجَاءَ بَرَكَتِهَا»

"நபி ﷺ அவர்கள் நோயுற்றால், முஅவ்விதாத் அத்தியாயங்களைத் தம் மீது தாமே ஓதி ஊதிக்கொள்வார்கள். அவர்களுடைய வலி கடுமையானபோது, நான் அவர்கள் மீது (அவற்றை) ஓதி, அவர்களுடைய கையின் பரக்கத்தை ஆதரவு வைத்து, அவர்களுடைய கையாலேயே தடவிவிடுவேன்."
(புகாரீ 5016, முஸ்லிம் 2192)



مسجد أهل السنة والجماعة
Masjid Ahlus Sunnah wal Jama'ah
Coimbatore
@islamtamilinfo
islamtamil.com
Islam Tamil
இஸ்லாம் தமிழ்

ஆகவே, நோயுற்ற ஒருவருக்கு உறவினரோ நண்பரோ தாமாக முன்வந்து குர்ஆனையும் உறுதியான துஆக்களையும் ஓதுவது ஸுன்னாவில் உள்ளதே. ஆனால், ஒருவர் தம்மை நிரந்தரமாக "ருக்யா செய்பவராக" ஆக்கிக்கொண்டு, மக்கள் தேடிச் செல்லும் ஒரு தனி "சிகிச்சை மையமாக", அமர்வுகளும் கட்டணங்களும் மருந்து விற்பனையும் கொண்ட ஒரு தொழிலாக அதை நடத்துவது வேறு. இது பற்றி அஷ்ஷய்க் அப்துல்லாஹ் இப்னு அப்துர்ரஹீம் அல்-புகாரீ ஹஃபிதஹுல்லாஹ் கூறுகிறார்கள்:

> "நபி ﷺ அவர்களுக்குச் சூனியம் செய்யப்பட்டது. (அப்போது) இன்னாரிடமோ இன்னாரிடமோ தமக்கு ஓதுமாறு அவர்கள் கேட்கவில்லை. முஅவ்விதைன் (அல்-ஃபலக், அந்-நாஸ்) அத்தியாயங்கள் இறங்கியதற்குக் காரணம், நபி ﷺ அவர்களுக்குச் செய்யப்பட்ட சூனியமே என்பதில் தஃப்ஸீர் அறிஞர்கள் ஒருமித்துள்ளனர். ஸஹாபாக்கள் ரதியல்லாஹு அன்ஹும் அவர்களில் சிலருக்கு ஜின் தீண்டலும் வலிப்பும் ஏற்பட்டது என்பதும் அறியப்பட்டதே. ஆனால், ஒருவர் வந்து, இன்னாருக்கும் இன்னாருக்கும் ஓதுவதற்காகவே தம்மை முழுமையாக ஒதுக்கிக்கொண்டு, ஓதுவதோடு "இதை எடுத்துக்கொள், இதைக் குடி, இதைச் சாப்பிடு, இதைச் செய்" என்று பரிந்துரைத்து, "ஒரு அமர்வு, இரண்டு அமர்வுகள், பத்து, இருபது, முப்பத்தைந்து அமர்வுகள் அவசியம்" என்று கூறி, பிறகு பைகள் பணத்தால் நிரம்புவது (பணம் வசூலிப்பது என்ற இந்த நிலை) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படவில்லை."
>
> (ஷைக் அப்துல்லாஹ் அல்-புகாரீ ஹஃபிதஹுல்லாஹ், ஒரு கேள்விக்கு அளித்த பதிலின் ஒலிப்பதிவிலிருந்து)

ஷைக் அல்-புகாரீ ஹஃபிதஹுல்லாஹ் அவர்களின் இந்த ஃபத்வாவை முழுமையாக, "சூனியம், ஜின் பாதிப்பை உறுதிசெய்தலும் 'அனுபவம்' என்ற வாதமும்" என்ற தலைப்பின் கீழ் வேறொரு கட்டுரையில் காணலாம், இன்ஷா அல்லாஹ்.



مسجد أهل السنة والجماعة
Masjid Ahlus Sunnah wal Jama'ah
Coimbatore
@islamtamilinfo
islamtamil.com
Islam Tamil
இஸ்லாம் தமிழ்

## ◆ மூன்றாவது: சூனியத்திற்குச் சிகிச்சை அளிப்பதாகக் கூறும் முஸ்லிம் அல்லாதவரிடம் செல்வதன் சட்டம்

காய்ச்சல், சர்க்கரை நோய், அறுவை சிகிச்சை போன்ற உடல் நோய்களுக்கான மருத்துவத்தில், நம்பகமானவராக இருந்து, முஸ்லிம் அல்லாத மருத்துவரிடம் செல்வது ஆகுமானது.

**இமாம் இப்னுல் கய்யிம் ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார்கள்:**

> "ஹிஜ்ரத்தின்போது, காஃபிராக இருந்த அப்துல்லாஹ் இப்னு உரைகித் அத்துஅலீ என்பவரை நபி ﷺ அவர்கள் வழிகாட்டியாகக் கூலிக்கு அமர்த்தினார்கள். மருத்துவம், கண் மை (சிகிச்சை), மருந்துகள், எழுத்துப் பணி, கணக்கு, (பொருட்களின்) குறைகளை மதிப்பிடுதல் போன்றவற்றில் இறைமறுப்பாளரை நாடுவது ஆகும் என்பதற்கு இதில் ஆதாரம் உள்ளது. எதுவரை எனில், நேர்மையான முஸ்லிம்களிடம் மட்டுமே ஒப்படைக்கப்பட வேண்டிய பொறுப்புகளை அவர் மீது சுமத்தாத வரை. ஒருவர் காஃபிர் என்பதற்காக மட்டுமே, எதிலும் அவரை நம்பக்கூடாது என்று ஆகாது. ஏனெனில் வழிகாட்டுவதைவிட, அதிலும் குறிப்பாக ஹிஜ்ரத் பயணப் பாதையைப் போன்றதில் வழிகாட்டுவதைவிட ஆபத்தான விஷயம் வேறில்லை."
>
> (பதாஇஉல் ஃபவாஇத், பாகம் 3, பக்கம் 208)

இந்த அனுமதி அறியப்பட்ட உடல் நோய்களுக்கான மருத்துவத்தில் மட்டுமே. சூனியத்தை வெளியேற்றுதல், அதைக் கண்டறிதல், அன்பை அல்லது பிரிவை உண்டாக்குதல் போன்ற இந்த வகைச் சிகிச்சை உடல் நோய்களுக்கான மருத்துவம் அல்ல. முஸ்லிம் அல்லாதவர் அல்லாஹ்வின் வார்த்தையைக் கொண்டோ அவனுடைய பெயர்களைக் கொண்டோ ஓதிப்பார்ப்பதில்லை. எனவே இரண்டில் ஒன்றுதான் மீதமிருக்கிறது: தங்கள் "தெய்வங்களிடம்" நெருக்கம் தேடுவதற்காக அவர்கள் ஓதும் இணைவைப்பு மந்திரங்கள், அல்லது சூனியமும் ஷைத்தான்களின்



مسجد أهل السنة والجماعة
Masjid Ahlus Sunnah wal Jama'ah
Coimbatore
@islamtamilinfo
islamtamil.com
Islam Tamil
இஸ்லாம் தமிழ்

உதவியை நாடுதலும். ஆகவே அவரிடம் செல்வது, சூனியக்காரனிடமும் குறிகாரனிடமும் செல்வதைப் போன்றதே; அது பெரும் பாவமாகும். அவன் கூறுவதை உண்மையென நம்பினால், முஹம்மத் ﷺ அவர்கள் மீது இறக்கப்பட்டதை நிராகரித்ததாகும். மக்களிடையே அவர் பிரபலமாக இருப்பதும், "அனுபவத்தில் பலன் கண்டது" என்று அவர்கள் கூறுவதும் அதை ஹலாலாக்கிவிடாது. சூனியக்காரனின் கையால் சில வேளை குணம் கிடைப்பது ஒரு சோதனையாக நிகழலாம். மார்க்கச் சட்டத்தையே கவனிக்க வேண்டும்; அனுபவத்தை அல்ல.

அவர்களின் கையால் குணம் கிடைப்பது அவர்களின் முறை சரியானது என்பதற்கு ஆதாரமாகாது என்பதற்கு, ஷைக் இப்னு பாஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் இந்தக் கூற்று சான்றாகும்:

> "மறைவான விஷயங்களை அறிவதாக வாதிடும் இந்தக் குறிகாரர்களிடமோ, சூனியக்காரர்களிடமோ, குறிசொல்பவர்களிடமோ ஒரு முஸ்லிம் செல்வதோ, அவர்களிடம் கேட்பதோ கூடாது. ஏனெனில் நோயாளி பல காரணங்களால் குணமடையலாம்; குணமடையாமலும் போகலாம். எல்லா நோயாளிகளும் குணமடைவதில்லை. சில வேளை அவருடைய நோய்க்குப் பொருந்தாத மருந்தைக் கொண்டு அவருக்குச் சிகிச்சை அளிக்கப்படலாம். சில வேளை அவருடைய தவணை (மரணம்) வந்துவிட்டிருக்கலாம்; அப்போது மருந்துகள் பலனளிக்காது. மருந்துகள் பலனளிப்பது தவணை வராமல் இருப்பதைப் பொறுத்தது. அல்லாஹ் கூறுகிறான்: "எந்த ஓர் ஆன்மாவுக்கும் அதன் தவணை வந்துவிட்டால் அல்லாஹ் அதைப் பிற்படுத்தமாட்டான்." தவணை வந்துவிட்டால் மருந்துகள் பலனளிக்காது."
>
> (மஜ்மூஉ ஃபதாவா இப்னு பாஸ், பாகம் 8, பக்கம் 119)

### ◆ மார்க்க ரீதியான சிகிச்சை

அஹ்லுஸ் ஸுன்னாவைச் சேர்ந்த, அறியப்பட்டவர்களிடம் குர்ஆனைக் கொண்டும் உறுதியான துஆக்களைக் கொண்டும் ருக்யா செய்தல், அறியப்பட்ட ஆகுமான மருந்துகளைப் பயன்படுத்துதல், அல்லாஹ்வின் மீது தவக்குல் வைத்து அவனிடம் பிரார்த்தித்தல். இவை பற்றிய அறிஞர்களின் விளக்கங்களை, இதைத் தொடர்ந்து வரும் “சூனியத்திற்கான மார்க்க ரீதியான சிகிச்சை (ஸர்ஃப் – அத்ஃப் உட்பட)” என்ற தனிக் கட்டுரையில் காணலாம், இன்ஷா அல்லாஹ்.

**யா ரப்! முஸ்லிம்களில் நோயுற்றவர்களுக்கு நிவாரணம் அளிப்பாயாக! கணவன் மனைவியரை உனக்குக் கீழ்ப்படிவதில் ஒன்றிணைப்பாயாக!**

அல்லாஹ்வே மிக அறிந்தவன். நம் நபி முஹம்மத் ﷺ அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தார், தோழர்கள் அனைவர் மீதும் அல்லாஹ் ஸலவாத்தும் ஸலாமும் பொழிவானாக.

தொகுப்பு: முஹம்மத் அஸ்லம்.



مسجد أهل السنة والجماعة
Masjid Ahlus Sunnah wal Jama'ah
Coimbatore
@islamtamilinfo
islamtamil.com
Islam Tamil
இஸ்லாம் தமிழ்

## எங்களைப் பின்தொடருங்கள்
### Follow Us

குர்ஆன், ஸுன்னாவின் தெளிவான கல்வியை தொடர்ந்து பெற, எங்கள் இணையதளத்தையும் சமூக ஊடகத் தளங்களையும் பின்தொடருங்கள்.

**islamtamil.com**

**WhatsApp**
Islam Tamil சேனல்

**YouTube**
@islamtamilinfo

**Facebook**
islamtamilinfo

**Instagram**
islamtamilinfo

**Telegram**
islamtamilinfo

**X**
islamtamilinfo

**SoundCloud**
islamtamilinfo

இக்கட்டுரையைப் பிறருக்கும் பகிர்ந்து, நன்மையில் பங்கு பெறுங்கள்.



مسجد أهل السنة والجماعة
Masjid Ahlus Sunnah wal Jama'ah
Coimbatore
@islamtamilinfo
islamtamil.com
Islam Tamil
இஸ்லாம் தமிழ்